DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

Miscellaneous case No: : S.C.No.216/2014
Preliminary Register :
Sessions :
Deposition of witness of : P.W.6
Name :பாண்டி
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.07.2023

-----

(எதிரிகள் 1,3,4,5,6 ஆஜர். இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் முதலைக்குளத்தில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அத்தாட்சி மற்றும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். தேதி ஞாபகமில்லை. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நானும், பாண்டியும் வடக்கிலிருந்து தெற்காக வேலை முடித்து வந்து கொண்டிருந்தோம். இரவு 8.00 மணியளவில் தலையாரி இளங்கோவன் வீட்டு முன்பு போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். அக்கம்பக்கத்தில் உள்ள வீட்டு உரிமையாளர்களை கேட்டார்கள். போலிசார் வந்ததிற்கு

அடையாளமாக பார்வை மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள். மற்றொரு கையெழுத்து எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பில் குறிப்பிட்ட பகுதி மட்டும் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலிசார் விசாரணையின் போது அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக அதே நேரம் இவ்வழக்கு சான்று பொருளான கத்தி மற்றும் இரும்பு கம்பி ஒன்று ஆகியவை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றும் போது நானும் என்னுடன் வந்த பாண்டி என்பவரிடம் தயார் செய்த அத்தாட்சியில் சாட்சியாக கையெழுத்து செய்துவிட்ட தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக அத்தாட்சி குறித்து எதுவும் தெரியாது என பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

பார்வை மகஜரில் ஆண் போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். கையெழுத்துகளை போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை.</u>**

/*Sd/* Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 6.7.2023,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.